**செய்தி வெளியீடு எண் : 820** **நாள் : 03.05.2023**

## மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி

பிரபல திரைப்பட இயக்குநரும், தயாரிப்பாளரும், நடிகருமான திரு.மனோபாலா (வயது 69) அவர்கள் இன்று 03.05.2023 உடல்நலக் குறைவினால் காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் மற்றும் சின்னத்திரை விருதுகள் தேர்வுக்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். 2011ஆம் ஆண்டிற்கான சிறந்த நகைச்சுவை நடிகருக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதினை திரு.மனோபாலா அவர்களுக்கு வழங்கப்பட்டதை இத்தருணத்தில் நினைவு கூர்கிறேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், திரைத்துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in